மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 15 திங்கட்கிழமை 01.12.2025 கதிர் 386




# மன்னாரில் தரைவழிப்பாதை முழுமையாகத் துண்டிப்பு!



## குஞ்சுக்குளம் கிராம மக்களுக்கு ஹெலி ஊடாகப் பொருள்கள்

மன்னார், டிச. 01

மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்ட கடும் மழை மற்றும் வெள்ளம் காரணமாக தரைவழிப்பாதை முழுமையாகத் துண்டிக்கப்பட்ட நிலையில் பாதிக்கப்பட்ட குஞ்சுக்குளம் கிராம மக்களுக்கு கடந்த மூன்று தினங்களுக்கு பின்னர் இன்று காலை ஒரு தொகுதி உலர் உணவு மற்றும் மருத்துவப் பொருள்கள் விசேட ஹெலி மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தரைவழிப்பாதை துண்டிக்கப்பட்ட நிலையில் குஞ்சுக்குளம் கிராம மக்கள் கடந்த மூன்று தினங்களாக பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வந்ததோடு, மருத்துவ தேவைகளையும் முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டது.

இந்தநிலையில் மன்னார் மாவட்ட அரசா அதிபர் க.கனகேஸ்வரனின் நடவடிக்கையை அடுத்து மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ

7 ➤

# வெள்ளத்தில் சிக்கி மாயமான யாழ். இளைஞர் சடலமாக மீட்பு!




யாழ்ப்பாணம், டிச. 01

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த பஸ், அனுராதபுரம் கலா ஓயா பாலத்துக்கு அருகில் வெள்ளத்தில் சிக்கியதில் காணாமல்போன இளைஞர் மீட்கப்பட்டுள்ளார்.

4 நாட்கள் மேற்கொண்ட தேடுதலின் பின்னர் இன்று காலை அவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் தனியார் நிதி நிறுவனம் ஒன்றில் கடமையாற்றும் கல்வியங்காடு பகுதியைச் சேர்ந்த 36 வயதான தணிகாசலம் பத்மநிகேதன் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கடந்த 27 ஆம் திகதி இரவு கொழும்பு நோக்கிப் பயணித்த பஸ், அனுராதபுரம் - புத்தளம் வீதியில் கலா ஓயா பகுதியில் வெள்ளத்தில் சிக்கியது. அதன்போது பஸ்ஸினுள் சுமார் 60 பேர் வரையில் பயணித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

முதல் கட்டமாக பஸ்ஸின் மேற்கூரையில் பாதுகாப்புத் தேடி நின்றவர்கள் அருகில் இருந் வீடொன்றின் கூரை மீது ஏற்றி பாதுகாப்பாகத் தங்க வைக்கப்பட்டனர். பின்னர் அவர்கள் கடற்படையினரின் உதவியுடன் படகுகளில் ஏற்றப்பட்டு கடுமையான போராட்டத்தின் மத்தியில் மீட்கப்பட்டனர்.

7 ➤



# 355 ஆக உயர்ந்தது சாவு எண்ணிக்கை!

## 366 பேரைக் காணவில்லை

கொழும்பு, டிச. 01

இலங்கையில் சீரற்ற காலநிலையால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 355 ஆக உயர்ந்துள்ளது.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், 366 பேர் காணாமல்போயுள்ளனர் என்றும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

7 ➤

# தீவகத்துக்கான போக்குவரத்து வழமைக்கு!



யாழ்ப்பாணம், டிச. 01

யாழ்ப்பாணத்தில் இருந்து நயினாதீவுக்குப் பயணிப்பதற்கான போக்குவரத்து சேவைகள் மற்றும் படகு சேவைகள் இன்று திங்கட்கிழமை முதல் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் கடந்த சில தினங்களாக நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக தீவகங்களுக்கான கடல் வழிப் போக்குவரத்துக்கள் முற்றாகத்

7 ➤

# வட்டுவாகல் பாலம் இன்று இரு துண்டுகளாகப் பிளவு!

## போக்குவரத்து முற்றாகத் தடை



முல்லைத்தீவு, டிச. 01

வட்டுவாகல் பாலம் இன்று இரு துண்டுகளாகப் பிளவடைந்து கடுமையாகச் சேதமடைந் துள்ளது.

7 ➤

# 6 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய சிவப்பு எச்சரிக்கை!




பதுளை, டிச. 01

சீரற்ற காலநிலையால் 6 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, பதுளை, கண்டி, கேகாலை, குருநாகல், மாத்தளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களுக்கு மூன்றாம் கட்ட சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று தேசிய கட்டட ஆய்வு நிறுவகம் அறிவித்துள்ளது. மண்சரிவு ஏற்படக்கூடிய பகுதிகளில் வசிக்கும் மக்களை மிக அவதானத்துடன் செயற்படுமாறும் வலியுறுத்தப்பட்டுள்ளது. அத்துடன், அதிகாரிகளின் ஆலோசனைகளுக்கு அமைய முன்னாயத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் குறித்த பகுதி மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

# இன்றைய ரயில் சேவை தொடர்பில் ரயில்வே திணைக்களத்தின் அறிவிப்பு!

கொழும்பு, டிசெ.1

பிரதான மார்க்கத்தில் இன்றையதினம் (01) 19 ரயில் சேவைகளையும், கரையோர மார்க்கத்தில் 34 ரயில் சேவைகளையும் இயக்குவதற்கு ரயில்வே திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

அதன்படி பிரதான ரயில் மார்க்கத்தில் காணப்படும் தடைகள் காரணமாக, சம்பந்தப்பட்ட ரயில்கள் கொழும்பு கோட்டையிலிருந்து எம்புல்தெனிய வரைக்கும், எம்புல்தெனியவிலிருந்து கொழும்பு கோட்டை வரைக்கும் மாத்திரமே இயக்கப்படவுள்ளன.

அத்துடன், புத்தளம் மார்க்கத்தில் 18 ரயில் சேவைகள் இயக்கப்படவுள்ளதுடன், குறித்த ரயில் சேவைகள் கொழும்பு கோட்டையிலிருந்து நீர்கொழும்பு கொச்சிக்கடை வரைக்கும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும் களனிவெளி மார்க்கத்தில் 10 ரயில் சேவைகளை இயக்கவும் ரயில்வே திணைக்களம் தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## குடிநீரைப் பயன்படுத்துவது தொடர்பில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் விடுத்துள்ள அறிவித்தல்!

கொழும்பு, டிசெ.1

குடிநீரைப் பயன்படுத்துவதில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும் என பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போது ஏற்பட்ட அனர்த்த நிலைமையின் போது வெள்ளத்தில் மூழ்கிய பகுதிகளில் உள்ள கிணற்று நீரைப் பருகுவதைத் தவிர்க்குமாறு பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் சமில் முத்துக்குட தெரிவித்துள்ளார்.

இவற்றை பருகுவதால் காய்ச்சல், வயிற்றுப்போக்கு போன்ற நிலைமைகள் ஏற்படுவதற்கான சாத்தியம் காணப்படுவதால், மக்கள்

கொதித்தாறிய நீரை அருந்துமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

அத்துடன் தற்போது ஏற்பட்ட அனர்த்த நிலமையால் வீடுகளைச் சுற்றிலும் நுளம்புகள் பெருகும் அபாயம் உள்ளது. எனவே நுளம்புகள் பெருகும் இடங்களை அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

இது தொடர்பில் கவனம் செலுத்தாவிட்டால் டெங்கு மற்றும் சிக்குன்குனியா போன்ற நோய்கள் பரவும் அபாயம் இருப்பதாகவும் சமில் முத்துக்குட தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நிவாரணப் பணியின் போது ஹெலிகொப்டர் விபத்து- பிரதான விமானி உயிரிழப்பு!

*கொழும்பு, டிசெ.1*

*இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான பெல் – 212 ரக ஹெலிகொப்டர் வென்னப்புவ, லுணுவில பிரதேசத்தில் அவசரமாகத் தரையிறக்கப்பட்ட முற்பட்ட போது ஆற்றில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.*

*குறித்த சம்பவம் நேற்று (30) மாலை இடம்பெற்றுள்ள்ளது.*

*சம்பவம் தொடர்பில் தெரியவருவது,*

*நாட்டில் நிலவிய சீரற்ற வானிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப் பொருட்களை விநியோகிக்கும் நடவடிக்கையில் இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான பெல் – 212 ரக ஹெலிகொப்டர் ஈடுபட்டிருந்தது.*

*இதன்போது வென்னப்புவ லுணுவில பாலத்திற்கு அருகில் இருந்தவர்களுக்கு உணவுப்பொருட்கள் உள்ளிட்ட உபகரணங்களை வழங்கும் நடவடிக்கைக்காக ஹெலிகொப்டரை அவசரமாகத் தரையிறக்கப்பட்ட முற்பட்ட வேளையில், ஹெலிகொப்டர் அருகில் உள்ள ஆற்றில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது.*

*இந்த விபத்து சம்பவத்தின் போது விமானிகள் இருவர் உட்பட 5 விமானப்படை உறுப்பினர்கள் ஹெலிகொப்டரில் இருந்துள்ளனர்.*

*பிரதேசவாசிகளும், பொலிஸாரும் இணைந்து அவர்களை உடனடியாக மீட்டு மாரவில வைத்தியசாலையில் அனுமதித்தனர்.*

*எனினும், 41 வயதுடைய பிரதான விமானி விங் கமாண்டர் நிர்மால் சியம்பலாபிட்டிய உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.*

*பிரதான விமானி விங் கமாண்டர் நிர்மால் சியம்பலாபிட்டிய 3,000 மணித்தியாலங்களுக்கும் மேல் விமானப் பயண அனுபவத்தைக் கொண்ட அனுபவம் வாய்ந்த விமானி என இலங்கை விமானப்படை தெரிவித்துள்ளது.*

*குறித்த விபத்தில் மேலும் நான்கு விமானப்படை அதிகாரிகள் காயமடைந்து மாரவில வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.*



# ஆய்வு செய்து உறுதிப்படுத்தும் வரை வீடுகளுக்கு செல்ல வேண்டாம்

கொழும்பு, டிசெ.1

தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் மாவட்ட அலுவலக அதிகாரிகள் ஆய்வு செய்து முடிவுகளை வழங்கும் வரை, மக்கள் தமது வீடுகளுக்குத் திரும்ப வேண்டாம் என்று அந்த நிறுவனத்தின் சிரேஷ்ட ஆய்வாளர் கலாநிதி வசந்த சேனாதீர தெரிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வந்து, என்ன செய்ய வேண்டும் என்பதைத் தெளிவாகத் தெரிவித்து, தமது முடிவை வழங்கும் வரை, அதாவது வீடுகளுக்குச் செல்ல முடியும் என்பதை உறுதிப்படுத்தும் வரை, மிகவும் பாதுகாப்பற்ற இடங்களில் உள்ள மக்கள் அந்த இடங்களுக்குத் திரும்ப வேண்டாம் என்று அவர் அறிவுறுத்தியுள்ளார்.

அதன்படி, பாதுகாப்பற்ற நிலையில் இருந்த மக்கள் தொடர்ந்தும் முகாம்களிலேயே தங்கியிருக்குமாறு கலாநிதி வசந்த சேனாதீர கோரிக்கை விடுத்துள்ளார்.

7 மாவட்டங்களில் உள்ள 70 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு அறிவிக்கப்பட்டிருந்த மண்சரிவு எச்சரிக்கை அறிவித்தல்களும் வெளியேறுவதற்கான சிவப்பு அறிவித்தல்களும் மேலும் நீடிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன், அதிக மழை பெய்த அனைத்துப் பகுதிகளிலும் நிலம் நீரால் நிரம்பியுள்ளதால், அடுத்த சில நாட்களிலும் கூட மண்சரிவு, பாறைகள் உருண்டு விழுதல், அல்லது மண்மேடுகள் இடிந்து விழுவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக வசந்த சேனாதீர சுட்டிக்காட்டினார்.

நிலத்திலிருந்து விநோத சத்தங்கள், அல்லது நீர் ஊற்றுகள் தோன்றுதல் மற்றும் மறைதல் போன்ற அறிகுறிகளைக் கண்டால், உடனடியாக அந்த இடங்களைவிட்டு வெளியேறுமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். இதேவேளை, கொழும்பு, பதுளை, கண்டி, கேகாலை, குருநாகல், மாத்தளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களின் சில பகுதிகளுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய சிவப்பு எச்சரிக்கை தொடர்ந்து அமுலில் உள்ளது.

அந்த பிரதேசங்கள் கீழே..

பதுளை மாவட்டம்

ஊவ பரணகம
ஹல்துமுல்லை
வெலிமடை
பசறை
சொரணாதோட்ட
எல்ல
பதுளை
லுணுகலை
கந்தேகெட்டிய
மீகஹகிவுல
பண்டாரவளை
ஹப்புத்தளை
ஹாலி-எல

கொழும்பு மாவட்டம்

பாதுக்கை
சீதாவக்க

கண்டி மாவட்டம்

உடுநுவர
பஸ்பாகே கோறளை
பன்வில
தொலுவ
அக்குரணை
தும்பனே
ஹதரலியத்த
உடுதும்பறை
யட்டிநுவர
பாததும்பறை
குண்டசாலை
தெல்தோட்ட
மெததும்பறை
பாத்தஹேவாஹெட்ட
கங்கவட்ட கோறளை
ஹாரிஸ்பத்துவ
பூஜாபிட்டிய
கங்கஇஹல கோறளை
உடபலாத்த
மினிப்பே

கேகாலை மாவட்டம்

கலிகமுவ
மாவனல்லை
யட்டியாந்தோட்ட
தெஹியோவிட்ட
புலத்கொ/ஹபிட்டிய
ரம்புக்கனை
வரக்காப்பொல
அரநாயக்க
ருவன்வெல்ல
தெரணியகலை
கேகாலை

குருநாகல் மாவட்டம்

மாவத்கம
மல்லவப்பிட்டிய
அலவ்வ
நாரம்மலை
பொல்கஹாவெல
ரிதீகம

மாத்தளை மாவட்டம்

பல்லேபொல
ரத்தோட்ட
யட்டவத்த
நாஉல
லக்கல பல்லேகம
உக்குவெல
மாத்தளை
வில்கமுவ
அம்பன்கங்கை கோறளை

நுவரெலியா மாவட்டம்

ஹங்குரன்கெத்த
மத்துரட்ட
நுவரெலியா
தலவாக்கலை
வலப்பனை
நில்தண்டாஹின்ன
அம்பகமுவ
கொத்மலை மேற்கு
கொத்மலை கிழக்கு (ஐ)

# அனர்த்தத்திற்கு உள்ளானோருக்கு GovPay ஊடாக நன்கொடை வழங்கும் வசதி

கொழும்பு, டிசெ.1

நாட்டில் நிலவும் சீற்ற வானிலை காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதை நோக்கமாகக் கொண்டு, புழுீயல ஊடாக நன்கொடைகளைச் செலுத்தக்கூடிய ஒரு வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

நிதி அமைச்சினால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள அனர்த்த நிவாரண நிதியத்திற்கு நன்கொடைகளை வழங்குவதற்கு இலகுவானதும் வெளிப்படைத்தன்மை கொண்டதுமான இந்த முறைமை தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அரச கொடுப்பனவுக்கான பிரதானமாக விளங்கும் GovPay ஊடாக, எவர் வேண்டுமானாலும், எந்த நேரத்திலும், உடனடியாக நன்கொடைகளைச் செலுத்த முடியும்.

இதில், நன்கொடைப் பணம் உடனடியாக நிதிக்கு வரவு வைக்கப்படுவதுடன், வீட்டில் இருந்தோ அல்லது எங்கிருந்தோ இலகுவாக நன்கொடை வழங்கக்கூடியதாகவும், அத்துடன் அந்த செயல்முறை முழுமையாக வெளிப்படைத்தன்மையுடன் (வுசயளிளசநெஉல) காணப்படுவதும் இதன் சிறப்பம்சமாகும் என டிஜிட்டல் பொருளாதார அமைச்சு அறிவித்துள்ளது.

புழுீயல உடன் இணைக்கப்பட்டுள்ள இலங்கையிலுள்ள வர்த்தக வங்கிகள் (Commercial Banks) மற்றும் அங்கீகரிக்கப்பட்ட FinTech nraypfs; (Apps) பலவற்றின் மூலம் இந்த அனர்த்த நிவாரண நிதிக்கு நிதியுதவி வழங்க முடியும்.

நன்கொடைகளைச் செலுத்தக்கூடிய வங்கிகள் மற்றும் குவைஉெஉா செயலிகளின் பட்டியலை அறிந்துகொள்ள https://govpay.lk/si/supported-banks-fintech என்ற இணைப்பிற்குச் செல்ல முடியும். (ஐ)

# மரக்கறிகளின் விலைகள் கிடுகிடுவென உயர்வு



கொழும்பு, டிசெ.1

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்திற்கு கிடைக்கும் மரக்கறிகளின் மொத்த விலைகள் சடுதியாக உயர்ந்துள்ளன.

இதன்படி, ஒரு கிலோகிராம் கரட் ரூபாய் 700 முதல் ரூபாய் 1000 வரை விற்பனை செய்யப்படுகிறது.

அத்துடன், போஞ்சு, லீக்ஸ் போன்ற மரக்கறிகளும் 500 ரூபாய் முதல் 800 ரூபாய் வரை அதிகரித்துள்ளன.

கடந்த வாரங்களில் 30 ரூபாவிற்கு விற்பனையான ஒரு கிலோ கிராம் வட்டகாயின் விலையும் 100 முதல் 130 வரை தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் விற்பனை செய்யப்படுகிறது.

மழை மற்றும் மண்சரிவு காரணமாக பெரும்பாலான மரக்கறித் தோட்டப் பயிர்கள் அழிவடைந்தமையே இந்த விலை உயர்வுக்குக்காரணம் என தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தின் வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர். (ஐ)

# வெளிநாட்டு உதவியை நிர்வகிக்க அவசர ஒருங்கிணைப்புப் பிரிவு



கொழும்பு, டிசெ.1

வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட இலங்கையர்களுக்கான நிவாரண சேவைகளை நிர்வகிப்பதற்கும் ஒழுங்குபடுத்துவதற்கும் வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு இணைந்து அவசர ஒருங்கிணைப்புப் பிரிவை நிறுவியுள்ளது.

வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள், இலங்கையில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திர நிறுவனங்கள் மற்றும் ஏனைய தரப்பினர்களிடமிருந்து பெறப்படும் உதவிகளை ஒருங்கிணைப்பதற்காக இந்த அவசர ஒருங்கிணைப்புப் பிரிவு செயற்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து உதவிகளும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சமூகங்களின் நலனுக்காகப் பயன்படுத்தப்படும் என்றும், செயல்முறையின் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் உறுதி செய்யப்படும் என்றும் வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

உதவி முகாமைத்துவத்துடன் மேலதிகமாக, வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள தமது உறவினர்களுடன் தொடர்புகொள்வதற்கு ஒருங்கிணைப்பதற்கும் இந்த பிரிவு செயல்படும் என்று அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தேவை உள்ளவர்களுக்கு சர்வதேச ஆதரவையும், வெளிநாடுகளில் உள்ள ஆதரவாளர்களின் உதவியையும் விரைவாகவும் வினைத்திறனுடனும் சென்றடைய இந்த பிரிவு வசதியை ஏற்படுத்தும்

இந்த அவசர ஒருங்கிணைப்புப் பிரிவு, அனர்த்தத்திற்கு விரிவான மற்றும் பயனுள்ள பதிலளிப்பை உறுதி செய்வதற்காக ஜனாதிபதி செயலகம், பிரதமர் அலுவலகம், பாதுகாப்பு அமைச்சு மற்றும் ஏனைய தொடர்புடைய நிறுவனங்களுடன் நெருக்கமான ஒருங்கிணைப்பில் செயற்படும் என்றும் அந்த அறிவிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# தவறான தகவல்களை பரப்புவதற்கு எதிராக நடவடிக்கை

நிலவும் அவசர கால சூழ்நிலை காரணமாக, ஜனாதிபதியால் கடந்த 29 திகதியிட்ட இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 2464/32 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் 2025 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க அவசரகால (சிறப்பு ஏற்பாடுகள் மற்றும் அதிகாரங்கள்) விதிமுறைகளை அறிவித்துள்ளார்.

அதன்படி, அவசர கால பேரிடர் நிலைமை குறித்து பொதுமக்களை பயமுறுத்தும் அல்லது தொந்தரவு செய்யும் எந்தவொரு வதந்தி அல்லது தவறான அறிக்கை தொடர்பாகவும், வாய்மொழியாகவோ, எழுத்துப்பூர்வ, டிஜிட்டல் அல்லது தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்பம், தானியங்கி அமைப்புகள் அல்லது செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட வேறு எந்த ஊடகங்கள் மூலமாகவோ, தொடர்பு கொள்ளப்பட்ட, வெளியிடப்பட்ட, உருவாக்கப்பட்ட அல்லது பரப்பப்பட்ட எந்தவொரு வதந்தி அல்லது தவறான அறிக்கை தொடர்பாகவும் சட்டம் அமல்படுத்தப்படலாம் என்று கூறப்பட்டுள்ளது.

ஒரு பொலிஸ் அதிகாரி அல்லது முப்படையினருக்கு, மேற்கண்ட குற்றங்களை விசாரிக்க அதிகாரம் வழங்கியுள்ளது.

இந்தக் குற்றங்களுக்காக, முப்படையினரால் ஒருவர் கைது செய்யப்பட்டால் அதை குறித்த பகுதியின் கட்டளை அதிகாரியிடம் தெரிவித்து, சந்தேக நபர் 24 மணி நேரத்திற்குள் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும் ஒரு பொலிஸ் அதிகாரியால் கைது செய்யப்பட்டால், அதை குறித்த பிரிவின் பொலிஸ் கண்காணிப்பாளரிடம் தெரிவிக்க வேண்டும்.

இதுபோன்ற பேரிடர் சூழ்நிலைகளில் தவறான தகவல்களை வழங்குவதும் உருவாக்குவதும் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் தடையாக இருக்கலாம் என்பதால், இது மூலம் துல்லியமான தரவுகள் மட்டுமே பொதுமக்களுக்கு பரப்பப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

# தத்தளிக்கும் இலங்கைக்கு இந்தியா உதவிக்கரம்: நிவாரணப் பொருட்களுடன் சென்ற ஐ.என்.எஸ்., சுகன்யா!



புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு உதவி செய்வதற்காக, நிவாரணப்பொருட்களுடன் இந்திய கடற்கடை கப்பல் ஐ.என்.எஸ்., சுகன்யா, திரிகோணமலை துறைமுகத்துக்கு சென்றுள்ளது.

வங்கக்கடலில் உருவான டிட்வா புயல் காரணமாக, கடந்த சில நாட்களாக நம் அண்டை நாடான இலங்கையில் கனமழை கொட்டித் தீர்த்தது. பலத்த சூறாவளி காற்றால், இலங்கை கிழக்கு பகுதியின் பெரும்பாலான இடங்களில் மரங்கள், மின்கம்பங்கள் சாய்ந்தன. கொழும்பு, மட்டக்களப்பு உட்பட நாடு முழுதும் கொட்டிய மழையால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவால் பலியானோர் எண்ணிக்கை 334 ஆக உயர்ந்துள்ளது.

மாயமான 350க்கும் மேற்பட்டோரை தேடும் பணியில் பேரிடர் மீட்புக் குழுவினர் ஈடுபட்டுஉள்ளனர். இங்கு, அவசர நிலை பிறப்பிக்கப்பட்டதை அடுத்து, பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு நடவடிக்கை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இலங்கைக்கு உதவும் வகையில், நம் விமானப் படை விமானங்கள் மற்றும் கடற்படையின் கப்பல்கள் அந்நாட்டுக்கு விரைந்துள்ளன. 'ஆப்பரேஷன் சாகர் பந்து' திட்டத்தின் வாயிலாக, நம் விமானப் படைக்கு சொந்தமான இரு விமானங்களில் தேசிய பேரிடர் மீட்புக் குழுவினர் 80 பேர் மற்றும் 21 டன் அத்தியாவசியப் பொருட்கள் இலங்கைக்கு இந்தியா அனுப்பியது. மேலும் ஒரு விமானத்தில் மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் உள்ளிட்ட நிவாரணப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

தற்போது நிவாரணப்பொருட்களுடன் இந்திய கடற்கடை கப்பல் ஐ.என்.எஸ்., சுகன்யா, திரிகோணமலை துறைமுகத்துக்கு சென்றுள்ளது. இந்த புகைப்படங்களை சமூக வலைதளத்தில் ஜெய்சங்கர் பதிவிட்டுள்ளார். இது தவிர, கடற்படைக்கு சொந்தமான ஐ.என்.எஸ்., விக்ராந்த் கப்பலில் இருந்து இரு ஹெலிகாப்டர்கள், அங்கு மீட்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. (ஐ)

## எந்த நாட்டுக்கு போனாலும் சொந்த நாட்டை மறக்க கூடாது என்.ஐ.டி., பட்டமளிப்பு விழாவில் துணை ஜனாதிபதி பேச்சு



"ஆராய்ச்சி மற்றும் புதுமை ஆகியவை இந்தியாவின் தொழில்நுட்ப பயணத்தை இயக்கும் இரட்டை இயந்திரங்களாக செயல்படுகின்றன,"என, துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன் பேசினார்.

ஹரியானா மாநிலம் குருஷேத்ரா தேசிய தொழில்நுட்ப நிறுவனத்தின், 20வது பட்டமளிப்பு விழா நேற்று நடந்தது. துணை ஜனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணன், மாணவ - மாணவியருக்கு பட்டம் வழங்கிப் பேசியதாவது:

புதுமைகள் நம் நாட்டின் அடையாளத்தை பிரதிபலிக்கின்றன. இதன் வாயிலாக மனிதகுலத்துக்கே சேவை செய்யும் போது நமக்கு ஆத்ம திருப்தி ஏற்படுகிறது.

இளைஞர்கள் போதைப் பொருட்களிலிருந்து விலகி இருக்க வேண்டும். இன்றைய உலகில் ஒவ்வொரு துறையும் மனிதகுலம் இதற்கு முன் கண்டிராத வேகத்தில் முன்னேறி வருகிறது.

தொழில்களை வடிவமைக்கும் சக்தியாக தொழில் நுட்பம் வளர்ந்து வருகிறது. உலகில் எல்லாம் மாறிக்கொண்டே இருக்கிறது.

ஆராய்ச்சி மற்றும் புதுமைகள் ஆகியவை, தொழில் நுட்ப பயணத்தை இயக்கும் இரட்டை இயந்திரங்களாக செயல்படுகின்றன என்பதை இளம் தலைமுறையினர் கவனத்தில் கொள்ள வேண்டும்.

உள்நாட்டு கண்டுபிடிப்பு, நம் நாட்டின் வளங்கள் மற்றும் தேவைகளில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். தொழில்நுட்பத்தின் உண்மையான நோக்கம் முன்னேற்றம் மட்டும் அல்ல. தெளிவான நோக்கத்துடன் முன்னேற வேண்டும்.

நிலையான உற்பத்தி, புத்திசாலித்தனமான செயல்பாடு, குவாண்டம் தொழில்நுட்பங்கள், சுகாதார தொழில்நுட்பங்கள், விவசாய கண்டுபிடிப்பு மற்றும் பசுமை உள்கட்டமைப்பு ஆகிய அதிமுக்கியத்துவம் வாய்ந்த துறைகளில் இளம் கண்டுபிடிப்பாளர்கள் உருவாக வேண்டும். இந்த ஆராய்சிகள்தான் சர்வதேச அளவில் நம் நாட்டின் முக்கியத்துவத்தை உணர்த்தும். அதேநேரத்தில் நம் நாட்டின் பாரம்பரியத்தையும் மறந்து விடக்கூடாது.

இளம் தலைமுறையினரின் புத்திசாலித்தனம், உற்சாகம் மற்றும் பல்வேறு துறைகளில் பணியாற்றும் ஆர்வம் ஆகியவற்றால் தான் நம் நாடு தொழில்நுட்பத்தை உருவாக்கும் நிலைக்கு வளர்ந்து வருகிறது. டிஜிட்டல் இந்தியா, ஸ்டார்ட் அப் இந்தியா, மற்றும் மேக் இன் இந்தியா போன்ற முயற்சிகளால் நாட்டில் தொழில்முனைவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

'தேசிய கல்விக் கொள்கை--2020' நம்நாட்டை விஸ்வகுருவாக மாறுவதற்கான முற்போக்கான பாதையில் செலுத்துகிறது. பிரிட்டிஷ் ஆட்சியில் நம் நாட்டில் அறிமுகம் செய்யப்பட்ட மெக்காலே கல்வித் திட்டம் பெரும்பாலும் எழுதப்படிக்க தெரிந்தவர்களை மட்டுமே உற்பத்தி செய்தது. ஆனால், நம் தேசியக் கல்விக் கொள்கை படைப்பாற்றல் மற்றும் வேலைவாய்ப்பை ஊக்குவிக்கிறது.

தேசிய தொழில்நுட்ப கல்வி நிறுவனங்களில் படித்த ஏராளமானோர், 'ஸ்டார்ட் அப்' எனப்படும் துவக்கநிலை நிறுவனங்களை வெற்றிகரமாக நடத்துகின்றனர். இது, தனிப்பட்ட ஒருவரின் வளர்ச்சிக்கு மட்டுமின்றி, நாட்டின் வளர்ச்சிக்கும் நாட்டின் உள்கட்டமைப்புக்கும் மகத்தான பங்களிப்பு.

உலகின் எந்த நாட்டுக்குச் சென்றாலும், இந்தியா எப்போதும் உங்கள் இதயத்தில் இருக்கட்டும். நம் நாட்டுக்கு சேவை செய்வது உங்கள் நோக்கமாக இருக்கட்டும்.

அடுத்த கூகுள், அடுத்த டெஸ்லா, அடுத்த ஸ்பேஸ் எக்ஸ் ஆகியவை இளம் தலைமுறையினர் வாயிலாக நம் நாட்டில் உருவாக வேண்டும்.

குருக்ஷேத்ரா தேசிய தொழில்நுட்ப நிறுவனம், பெருமைமிக்க பாரம் பரியத்தைக் கொண்ட கல்வி நிறுவனம். இங்கு படித்து உலகம் முழுதும் 40,000க்கும் மேற்பட்டோர் முக்கியப் பதவிகளில் இருக்கின்றனர்.

இவ்வாறு அவர் பேசினார்.

ஹரியானா கவர்னர் ஆஷிம்குமார் கோஷ், முதல்வர் நயாப் சிங் சைனி, குருக்ஷேத்ரா தொழில்நுட்ப பல்கலை இயக்குனர் பி.வி.ரமணா ரெட்டி உள்ளிட்டோர் பங் கேற்றனர். (ஐ)



## இயக்குனர் ராஜ் நிடிமொருவை 2வது திருமணம் செய்தார் சமந்தா!

*நடிகை சமந்தா, தனது காதலனான ராஜ்நிடிமொருவை கோவை ஈஷா யோகா மையத்தில் உள்ள லிங்கபைரவி கோவிலில் இன்று காலை எளிய முறையில் திருமணம் செய்து கொண்டார்.*

*நடிகர் நாகார்ஜூனாவின் மகன் நாக சைதன்யாவை காதலித்து திருமணம் செய்த சமந்தா, சில வருடங்களில் கருத்து வேறுபாடால் 2021ல் பிரிந்தார். பின்னர், நாக சைதன்யா, நடிகை சோபிதா துலிபலாவை மறுமணம் செய்துகொண்டார். இதற்கிடையே தசை அழற்சி நோயால் பாதிக்கப்பட்டு, சிகிச்சைக்கு பின்னர் மீண்டு வந்த நடிகை சமந்தா, 'பேமிலி மேன், சிட்டாடல்: ஹனி பன்னி வெப் தொடர்களில் நடித்தார். அப்போது, அதன் இயக்குனர்களில் ஒருவரான ராஜ் நிடிமொருவுடன் சமந்தாவுக்கு நட்பு ஏற்பட்டது.*

*இந்த நட்பு நாளடைவில் காதலாக மாறியது. பொதுவெளியில் இருவரும் ஜோடியாக திரிவது, காதல் கிசுகிசுக்களை உண்மையாக்கின. சமீபத்தில் கூட இருவரும் நெருக்கமாக இருக்கும் படங்களை சமூக வலைதளத்தில் வெளியிட்டார் சமந்தா. ராஜ் நிடிமொருவும் ஏற்கனவே திருமணம் ஆகி விவாகரத்து ஆனவர். ஸ்யாமலி டே என்பவரை திருமணம் செய்து 2022ல் விவாகரத்து பெற்றிருந்தார். அதன்பிறகே சமந்தாவுடன் காதல் உதயமானது.*

*இந்த தகவல்தெலுங்கு திரையுலகில் சில மாதங்களாக பேசப்பட்டு வந்த நிலையில், சமந்தா–ராஜ் ஜோடி, இன்று டிச.1) கோவை ஈஷா யோகா மையத்தில் திருமணம் செய்து கொண்டுள்ளனர். ஈஷா யோகா மையத்தில் அமைந்துள்ள லிங்க பைரவி ஆலயத்தில் இவர்களது திருமணம் எளிய முறையில் நடந்துள்ளது.*

*ஐ)*



# ஒழுக்கம் உயர்வு தரும்



‘ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி’

திருவள்ளுவர், இந்தக் குறளில் ‘ஒழுக்கத்தால் மேன்மை கிடைக்கும் என்றும், ஒழுக்கம் தவறுவதால் பழி ஏற்படும்’ என்றும் ஒழுக்கத்தின் சிறப்பை வலியுறுத்துகிறார். கல்வி கற்கும் மாணவர்களாகிய நாம் ஒழுக்கத்தையும், கல்வியையும் இரு கண்களாக கடைப்பிடித்து வாழ்க்கைக் கல்வியை பயின்று சிறப்புற வேண்டும். ஒழுக்கத்தை காலம்தோறும் பேணிக் காக்க வேண்டும்.

நம்மை நல்வழிகளில் நெறிப்படுத்தி, மேன்மையோடுகூடியவாழ்வில்தழைக்கச் செய்யும் பண்பே ஒழுக்கம் ஆகும். வாழ்வில் ஒழுங்கைக் கடைப்பிடித்து வாழ்வதே நாம் தலைச்சிறந்து வாழ வழிவகுக்கும். ஒழுங்கு என்பது சாட்சிகள் இல்லாத இடத்திலும் தவறிழைக்காமல் நேர்மையாக நடப்பதாகும். இதை முன்னோர் அறநெறிகள், அனுபவங்கள் மூலம் ஒழுக்கத்தை உணர்த்திச் சென்றுள்ளனர். நீதி நூல்களாக எழுதி வைத்து உள்ளனர்.

மாணவர்களாகிய நாம், நேர்மையுடன், பொறுப்புடன், சமூகப் பொறுப்பு கொண்டோராக வளர வேண்டும். ஆசிரியர்கள், பெரியோர்கள் வழிகாட்டும் பழக்க வழக்கங்களை பின்பற்றி, அறிவினால், திறமையினால் சிறந்த சிந்தனை கொண்டோராக செயல்பட வேண்டும்.

நீதி நெறிகளை நமக்கு வலியுறுத்தும் நோக்குடன் நம் சான்றோர்கள் இயற்றிய நீதிநூல்கள் பல நீதிக்கருத்துகளை எளிய நடையில் நமக்கு எடுத்துரைப்பதாக உள்ளன. அவைகளில் ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், திருக்குறள், நாலடியார், திரிகடுகம், சிறுபஞ்ச மூலம், பழமொழி முதலிய நூல்கள் தமிழ் இலக்கிய வரலாற்றில் முத்திரை பதித்தவை ஆகும். இவற்றில் திருக்குறள், உலகளவில் தமிழர்களின் ஒழுக்க நெறிகளை பறைசாற்றும் ஒப்பில்லா நூலாக புகழப்படுகிறது. அதனால்தான் அதை ‘உலக பொதுமறை’ என போற்று கிறார்கள். உலக மொழிகள் பலவற்றில் மொழிப்பெயர்க்கப்பட்டு பயிலப்படுகிறது.

‘ஒழுக்கம் விழுப்பம் தரும்’ என்பது குறள் நெறி. விழுப்பம் என்றால் உயர்வு என்று பொருள். ஒழுக்கம் வாழ்வில் உயர்வைத் தருவதால் ஒழுக்கத்தை உயிரினும் பெரியதாய் மதித்துப் போற்ற வேண்டும் என்று வள்ளுவர் குறளின் வழியே வலியுறுத்துகிறார். ஒருவர் தம் வாழ்வில் நன்மை அடைய வேண்டுமென்றால் நல் ஒழுக்கத்தை கடைப்பிடித்து வாழ்தல் அவசியமானது. இக்கருத்தையே வள்ளுவர் “நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்” என்று விளக்குகிறார். நல்லொழுக்கத்தோடு கூடிய உயர்வே நிலைக்கும், தழைக்கும்.

பள்ளிப்பருவத்தில் கவனத்துடனும், ஒழுக்கத்துடனும் நடந்து கொள்ளாவிட்டால், வாழ்க்கைப்பாதையில்வழுக்கி விழ நேரும். நம்மை வழுக்கி விழாமல் தாங்கிப்பிடிக்கும் ஊன்றுகோல் ஒழுக்கமுடையோர் வாய்ச்சொல்லும், நம் தமிழ் நீதி நூல்களும்தான். எந்த நிலையிலும் நமக்கு தீர்க்கமான வழியை அறம் சார்ந்தே போதித்து வழிநடத்தும் வழிகாட்டிகள், நீதிநூல்கள் தான். மாணவர்களாகிய நாம், பாடங்களில் கற்கும் நீதிக் கருத்துக்களைத் தேர்வு முடிந்தவுடன் மறந்து விடுதல்கூடாது. மாணவ பருவத்திலேயே ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும், நாட்டுப்பற்றையும் மேலும் வளர்த்து, எந்த வித பேதங்களும் இன்றி அனைவரையும் மதிக்க வேண்டும். வாழ்க்கை முழுவதும் கற்ற நெறிப்படி நடக்க வேண்டும். இதையே வள்ளுவர், “கற்க கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக” என்று அழகாகவும், தெளிவாகவும் உலக மாந்தருக்கு எடுத்துரைக்கிறார்.



மாணவர்களாகிய நாம் திரைப்படம், தொலைக்காட்சி போன்ற புறக் கவர்ச்சிகளில் அடிமையாகி நம் வாழ்வை வீணடிக்காமல் உயிரினும் மேலான ஒழுக்கத்தையும், அறிவூட்டும் கல்வியையும் செம்மையாக்கி கற்று, கற்ற நல் நெறிகளை வாழ்வில் கடைப்பிடித்து வாழ்ந்தால் சிறக்கலாம். நெறி தவறாமல் வாழ்ந்து சிறப்போம்! நாட்டின் பெருமை காப்போம்!

# ஜோ பைடன், கமலா ஹாரிஸ் செய்த குளறுபடி: அதிபர் டிரம்ப் குற்றச்சாட்டு



புலம்பெயர்ந்தோரை எந்த ஆவணங்களையும் சரிபார்க்காமல் அனுமதித்து, ஜோ பைடன், கமலா ஹாரிஸ் குளறுபடி செய்து நாட்டை கெடுத்து விட்டனர் என அமெரிக்க அதிபர் டிரம்ப் குற்றம் சாட்டியுள்ளார்.

அமெரிக்காவின் வெள்ளை மாளிகை அருகே, ஆப்கனைச் சேர்ந்த ஒருவர் சமீபத்தில் நடத்திய துப்பாக்கிச் சூட்டில், தேசிய காவல் படையைச் சேர்ந்த பெண் உள்ளிட்ட இரு வீரர்கள் படுகாயமடைந்தனர். இதில், பெக்ஸ்ட்ரோம், 20, என்ற வீராங்கனை முதலில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். மற்றொருவர் தீவிர சிகிச்சை பெற்று வருகிறார். இந்த துப்பாக்கிச்சூடு சம்பவத்திற்கு அந்நாட்டு அதிபர் டிரம்ப் கடும் கண்டனம் தெரிவித்து இருந்தார்.

பின்னர் அவர், அங்கீகரிக்கப்படாத குடியேற்றத்தை கட்டுப்படுத்துவது, வெளிநாட்டினர் மீதான சோதனையை தீவிரப்படுத்துவது ஆகியவற்றை நோக்கமாக வைத்து, தன் குடியேற்ற கொள்கையை மறுசீரமைப்பதாக அறிவித்தார். தற்போது, இந்த சம்பவத்திற்கு ஜோ பைடன் தலைமையிலான ஆட்சியை அதிபர் டிரம்ப் கடுமையாக சாடியுள்ளார். இது குறித்து, சமூக வலைதளத்தில் அதிபர் டிரம்ப் வெளியிட்ட பதிவு:

மோசமான ஜோ பைடன், 'எல்லை மன்னர்' என்று அழைக்கப்படும் கமலா ஹாரிஸ் ஆகியோர் புலம்பெயர்ந்தோரை எந்த ஆவணங்களையும் சரிபார்க்காமல் அனுமதித்து, குளறுபடி செய்து நாட்டை கெடுத்து விட்டனர். இவ்வாறு அதிபர் டிரம்ப் பதிவிட்டுள்ளார். அமெரிக்க உள்நாட்டுப் பாதுகாப்பு துறையின் செயலாளர் கிறிஸ்டி நோயம் கூறியதாவது:

வெள்ளை மாளிகை அருகே தாக்குதலை நடத்திய அரக்கன் இந்த நாட்டில் ஒருபோதும் இருந்திருக்கக்கூடாது. பைடன் நிர்வாகம் அவரை நாட்டிற்கு உள்ளே வர அனுமதித்தது.

இது ஒரு நாசவேலைச் செயலாகும். உடனடியாக அமலுக்கு வரும் வகையில், ஆப்கானிஸ்தான் நாட்டினர் தொடர்பான அனைத்து குடியேற்ற கோரிக்கைகளையும் செயலாக்குவது காலவரையின்றி நிறுத்தப்பட்டுள்ளது, பாதுகாப்பு மற்றும் சரிபார்ப்பு நெறிமுறைகளை மேலும் மதிப்பாய்வு செய்யும் வரை இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது. தேசிய காவல்படை வீரர் சாராவின் மரணத்திற்கு ஜோ பைடன் தான் காரணம். இவ்வாறு அவர் கூறினார். (ஐ)

## 'சட்டவிரோத குடியேறிகளை வெளியேற்ற உதவினால் ஒரு மாதத்துக்கு இலவச பீர்'



அமெரிக்காவில் குடியேறியுள்ள சட்டவிரோத வெளிநாட்டவரை திருப்பி அனுப்ப உதவுபவர்களுக்கு, ஒரு மாதத்துக்கு இலவசமாக பீர் வழங்குவதாக சர்ச்சைக்குரிய சலுகை அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் இடஹோ மாகாணத்தின் ஈகிள் நகரில் உள்ள, 'ஓல்டு ஸ்டேட் சலூான்' என்ற மதுபான கடை, சர்ச்சைக்குரிய சலுகைகளை வழங்குவதில் பிரபலமானது.

அந்த வகையில், தற்போது அமெரிக்காவில் நடந்து வரும் வெளிநாட்டவர் குடியுரிமைக்கு எதிரான நடவடிக்கை தொடர்பாக, அமெரிக்க மக்களுக்கு சமீபத்தில் ஒரு சலுகையை அறிவித்துள்ளது.

இச்சலுகை குறித்து கடையின் சமூக வலைதள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

இடஹோவில் உள்ள ஒரு சட்டவிரோத குடியேறியை, ஐ.சி.இ., எனப்படும் அமெரிக்க குடியுரிமை அதிகாரியிடம் அடையாளம் காண்பித்து, நாடு கடத்த உதவினால், அவர்களுக்கு ஓல்டு ஸ்டேட் சலூானில் ஒரு மாதம் இலவச பீர் வழங்கப்படும்.

இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கடை, இதற்கு முன் கடந்தாண்டு ஜூன் மாதத்தில் 'சீரான பாலின விழிப்புணர்வு மாதம்' என்று அறிவித்து சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

காரணம், அம்மாதத்தை, எல்.ஜி.பி.டி.க்யூ., எனும் தன் பாலின ஈர்ப்பாளர்கள் ஜூன் மாதத்தை 'பிரைடு மாதம்' ஆக கொண்டாடுகின்றனர்.

கொரோனா காலத்தில் முக கவசம் அணிவது, சமூக இடைவெளி போன்ற கட்டுப்பாடுகளுக்கும் இக்கடை தன் கடும் எதிர்ப்பை தெரிவித்திருந்தது. (ஐ)




## ஜெர்மனியில் எதிர்க்கட்சிக்கு எதிரான போராட்டத்தில் வன்முறை

ஜெர்மனியில் ஏ.எப்.டி., எனப்படும் 'ஜெர்மனிக்கான மாற்று' என்ற தீவிர வலதுசாரி அரசியல் கட்சி துவக்கியுள்ள இளைஞர் அமைப்புக்கு எதிராக நடந்த போராட்டத்தில் வன்முறை வெடித்தது.

ஐரோப்பிய நாடான ஜெர்மனியில் முக்கிய எதிர்க்கட்சியாக ஏ.எப்.டி., செயல்பட்டு வருகிறது. இதன் இளைஞர் பிரிவான 'இளம் மாற்று' என்ற அமைப்பை, ஜெர்மனி உள்நாட்டு உளவு நிறுவனம் 'தீவிரவாதக்குழு'வாக வகைப்படுத்தியிருந்தது.

இதையடுத்து, அது கலைக்கப்பட்டு, 'ஜெர்மன் தலைமுறை' என்ற புதிய இளைஞர் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, அரசியல் கட்சிகள் மற்றும் தொழிலாளர்கள் அமைப்புகள் சார்பில் நேற்று போராட்டம் நடந்தது. அப்போது நகரின் முக்கிய பகுதிகளில் 30,000க்கும் மேற்பட்டோர் குவிந்தனர். இதைத் தடுக்க முயன்ற போலீசாருடன் போராட்டகாரர்கள் மோதலில் ஈடுபட்டனர். இந்த சம்பவத்தில் 15 போலீசார் காயமடைந்ததாக கூறப்படுகிறது. (ஐ)

# ஊழல் வழக்கில் மன்னிப்பு வழங்க வேண்டும் கேட்கிறார் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, தனக்கு எதிராக நீண்டகாலமாக நடைபெற்று வரும் ஊழல் வழக்கு விசாரணையில் மன்னிப்பு வழங்குமாறு அந்நாட்டு அதிபரிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

2019ம் ஆண்டு இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு மீது லஞ்சம், ஊழல், நம்பிக்கை மீறல், மோசடி உள்ளிட்ட பிரிவுகளின் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. அவர் மீது மூன்று தனித்தனி வழக்குகளில் லஞ்சம் வாங்குதல், மோசடி மற்றும் உரிமை மீறல் ஆகிய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டது. இதற்கு அமெரிக்க அதிபர் டிரம்ப் எதிர்ப்பு தெரிவித்து இருந்தார்.

ஊழல் வழக்கில் நெதன்யாகுவுக்கு பொது மன்னிப்பு வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை இருந்தார். இந்நிலையில், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, தனக்கு எதிராக நீண்டகாலமாக நடைபெற்று வரும் ஊழல் வழக்கு விசாரணையில் மன்னிப்பு வழங்குமாறு அந்நாட்டு அதிபரிடம் கேட்டுக் கொண்டுள்ளார். இதற்கான ஆவணங்களை நெதன்யாகு சமர்பித்துள்ளார்.

இது தொடர்பாக நெதன்யாகு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது: நாட்டில் உள்ள பலரைப் போலவே, விசாரணையை உடனடியாக முடிக்க வேண்டும். இது நல்லிணக்கத்தை ஊக்குவிக்கவும் பெரிதும் உதவும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். இது தேசிய ஒற்றுமையை மீட்டெடுக்கும். இவ்வாறு நெதன்யாகு கூறியுள்ளார். (ஐ)



## தீவகத்துக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தடைப்பட்டன. இந்நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை முதல் சீரான காலநிலை நிலவுதனால் தீவகத்துக்கான கடல் வழிப் போக்குவரத்துச் சேவைகள் இன்று திங்கட்கிழமை முதல் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, குறிகாட்டுவான் இறங்குதுறை மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## மன்னாரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிலையத்தின் உதவி பணிப்பாளர் கே.திலீபன் தலைமையில் இன்று விமானப்படைக்கு சொந்தமான ஹெலி ஊடாக ஒரு தொகுதி உலர் உணவுகள் மற்றும் மருத்துவப் பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

குஞ்சுக்குளம் மற்றும் மாதா கிராம பகுதியில் சுமார் 304 குடும்பங்களைச் சேர்ந்த 133 நபர்கள் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு பாடசாலை, ஆலயம், பொது மண்டபங்களில் தங்கியுள்ளனர். இந்நிலையில் குறித்த உலர் உணவுப் பொருள்கள் மற்றும் மருத்துவப் பொருள்களும் இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டன.

மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் கே.திலீபன் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன், உதவி அரச அதிபர் எம்.பிரதீப் மற்றும் பணியாளர்கள் இணைந்து குறித்த பொருள்களை ஹெலி ஊடாக அனுப்பி வைத்துள்ளனர்.

## வட்டுவாகல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதனால் இந்தப் பாதை முற்றிலும் முடக்கப்பட்டுள்ளது.

எனவே, விசுவமடு, புதுக்குடியிருப்பு பகுதிகளிலிருந்து முல்லைத்தீவு நோக்கிப் பயணம் செய்பவர்கள் மாற்று வழியாகக் கேப்பாப்பிலவு வீதியைப் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம் என்று முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

கேப்பாப்பிலவு வீதியில் கனரக வாகனங்கள் செல்ல முடியாது. ஆனால் மோட்டார் சைக்கிள் உள்ளிட்ட இலகு வாகனங்கள் பயணம் செய்யலாம். ஆகையால், தயவுசெய்து கேப்பாப்பிலவு வீதியைப் பயன்படுத்தவும் என்று முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

## வெள்ளத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்நிலையில் இந்த பஸ்ஸில் பயணித்த தணிகாசலம் பத்மநிகேதன் என்ற இளைஞர் காணாமல்போயுள்ளார் என்று உறவினர்கள் நொச்சியாகம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

பஸ்ஸின் மேற்கூரையில் நின்றவர்கள் தொடர்பில் வெளியான காணொளி ஒன்றில் பத்மநிகேதன் காணப்பட்டார்.

அதேவேளை, வீட்டின் கூரையில் இருந்த வேளை கூரையின் ஒரு பகுதி உடைந்து விழுந்தது எனவும், அதன்போது சிலர் வெள்ளத்தில் விழுந்த நிலையில் அங்கிருந்தவர்களை அவர்களை மீட்டிருந்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், வீட்டின் கூரையின் ஒரு பகுதி உடைந்தபோதே பத்மநிகேதன் வெள்ளத்தில் விழுந்து காணாமல்போய் இன்று காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## 355...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கண்டி மாவட்டத்தில் அதிகபட்சமாக 88 பேரும், நுவரெலியா மாவட்டத்தில் 75 பேரும், பதுளை மாவட்டத்தில் அதிகபட்சமாக 71 பேரும், குருநாகல் மாவட்டத்தில் 37 பேரும் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கண்டி மாவட்டத்தில் 150 பேரும், நுவரெலியா மாவட்டத்தில் 62 பேரும், பதுளை மாவட்டத்தில் 53 பேரும் காணாமல்போயுள்ளனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்தோடு, 25 மாவட்டங்களில் 3 இலட்சத்து 18 ஆயிரத்து 252 குடும்பங்களைச் சேர்ந்த 11 இலட்சத்து 56 ஆயிரத்து 860 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் உறுதிப்படுத்தியுள்ளது.

அத்துடன் 1,529 பாதுகாப்பு தங்குமிடங்களில் 59 ஆயிரத்து 266 குடும்பங்களைச் சேர்ந்த 2 இலட்சத்து 9 ஆயிரத்து 568 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

# மருமகன் மீது மாமனார் வாள் வெட்டு- யாழில் சம்பவம்!

யாழ்.வடமராட்சி துன்னாலை பகுதியில் வாள் வெட்டு சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது. வடமராட்சி துன்னாலையை வேம்படி பகுதியை சேர்ந்த 31 வயதுடைய சிவகுமார் நிதீஸ்குமார் என்பவரே வாள் வெட்டுக்கு இலக்காகியுள்ளார். குறித்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் தெரியவருவது,

மாமன் மற்றும் மருமகனுக்கிடையில் இடம்பெற்ற வாய்த்தர்க்கம் வாள்வெட்டாக மாறியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்தில் மாமன், மருமகன் மீது வாளால் வெட்டியதில் மருமகன் படுகாயமடைந்துள்ளார். படுகாயமடைந்த நபர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை தாக்குதல் நடத்திய மாமனாரும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை நெல்லியடி பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தொற்றுநோய்கள் குறித்து எச்சரிக்கையாக இருங்கள்

வெள்ளம் குறையும் நிலைமையில் தொற்று நோய்கள் மற்றும் நோய்க்கிருமிகளால் நோய்கள் பரவுவதற்கான அதிக ஆபத்து குறித்து பொதுமக்கள் விழிப்புடன் இருக்குமாறு தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தின் உதவிச் செயலாளர் ஜயதிஸ்ஸ முனசிங்க கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும், அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக ஒவ்வொரு பிரதேச செயலகத்திற்கும் 50 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளதாக தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தின் உதவிச் செயலாளர் ஜயதிஸ்ஸ முனசிங்க தெரிவித்தார்.

தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தின் உதவிச் செயலாளர் ஜயதிஸ்ஸ முனசிங்க, திங்கட்கிழமை (01) முப்படை பாதுகாப்பு தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகைகள் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், அவசரகால அனர்த்த சூழ்நிலையில் கொள்வனவு நடவடிக்கைகளை தடையின்றி மேற்கொள்ள ஒவ்வொரு பிரதேச செயலாளருக்கும் 50 மில்லியன் ரூபா வரை வழங்கப்பட்டுள்ளதாகவும் ஜயதிஸ்ஸ முனசிங்க தெரிவித்தார். மேலும், உலர் உணவுக்காக இதுவரை பணத்தை வங்கியில் வைப்பிலிடும் முறைக்கு மேலதிகமாக தேவைக்கேற்ப உலர் உணவுப் பொருட்களை பொதியாக வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த உதவிச் செயலாளர், பிரதேச செயலாளர்கள் தமது பகுதிகளில் நிலவும் விசேட நிலைமைகளின் அடிப்படையில் பொருத்தமான குழுவொன்றின் மூலம் முடிவுகளை எடுக்கத் தேவையான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

குறிப்பாக உலர் உணவுப் பொருட்களுக்கு வழங்கப்படும் பணம் 07 நாட்களுக்காக ஒரு குடும்பத்திற்கு வழங்கப்படும் என்றும், அதனை தேவைக்கேற்ப அதிகரிக்கலாம் என்றும், தனி நபருக்கு 2100 ரூபா, இரண்டு உறுப்பினர்கள் கொண்ட குடும்பத்திற்கு 4200 ரூபா மற்றும் மூன்று உறுப்பினர்கள் கொண்ட குடும்பத்திற்கு 6300 ரூபா, நான்கு உறுப்பினர்கள் கொண்ட குடும்பத்திற்கு 8400 ரூபா மற்றும் ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு 10,500 ரூபா என்றவகையில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

வெள்ளம் குறையும் நிலைமையில் தொற்று நோய்கள் மற்றும் நோய்க்கிருமிகளால் நோய்கள் பரவுவதற்கான அதிக ஆபத்து குறித்து பொதுமக்கள் விழிப்புடன் இருக்குமாறு கேட்டுக்கொண்ட உதவிச் செயலாளர் ஜயதிஸ்ஸ முனசிங்க, இது தொடர்பாக சுகாதாரத் துறை உரிய நடவடிக்கைகளை எடுத்து வருவதாக தெரிவித்தார்.

வெள்ளம் காரணமாக வீடுகளை சேறு, மண் மற்றும் குப்பைகளிலிருந்து சுத்தம் செய்ய வேண்டியிருப்பதால், இதற்காக சுற்றறிக்கை 1(2025) இன் பிரிவு 5(2) திருத்தப்பட்டுள்ளது என்றும், அதன்படி, இந்த அனர்த்தத்தை எதிர்கொண்ட ஒவ்வொரு வீட்டிற்கும் அதன் சுகாதார நிலைமைகளை சீர்செய்யவும் அதை வசிக்கக் கூடிய வீடாக மாற்றவும் 10,000 ரூபா முன்பணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

அதன்படி, வீட்டின் உரிமையாளரைப் பொருட்படுத்தாமல், அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு நபருக்கும் உரிய முன்பணத்தை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும், அதற்கான சுற்றறிக்கையை பாதுகாப்பு செயலாளர் சம்பத் துய்யகொந்தா நேற்று வெளியிட்டதாகவும் ஜயதிஸ்ஸ முனசிங்க தெரிவித்தார்.

அனர்த்தத்தினால் கடுமையாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் தொடர்பாடல் நடவடிக்கைகளை சீர்செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், இந்த நேரத்தில் நிவாரணப் பணியாளர்கள் மிகவும் கடினமாக உழைத்து வருவதால், பொதுமக்கள் தமது முழுமையான ஆதரவை அவர்களுக்கு வழங்குமாறும் கேட்டுக்கொண்டார். (ஐ)

# "பொருட்களின் விலையை அதிகரித்தால் முறைப்பாடு செய்க"

நாட்டின் சீரற்ற வானிலையை தொடர்ந்து, அத்தியாவசியப் பொருட்களின் விலையை உயர்த்தும் வர்த்தகர்கள் குறித்து பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்கள் மூலம் முறைப்பாடளிக்குமாறு நுகர்வோர் விவகார அதிகார சபை வலியுறுத்தியுள்ளது.



அதனை மீறும் வர்த்தகர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நுகர்வோர் விவகார அதிகார சபை எச்சரித்துள்ளது.

பின்வரும் தொலைபேசி இலக்கங்கள் மூலம் முறைப்பாடளிக்கலாம்.

- மத்திய: 0771088918
- மேற்கு: 0770106603
- வடமேற்கு: 0771088902
- சபரகமுவ: 0771088912
- உவா: 0771088896
- தெற்கு: 0771088915
- வடக்கு: 0771088910
- வடக்கு: 0771088801
- கிழக்கு: 0770110096

# "அதிகமாக பொருட்களை சேகரிக்க வேண்டாம்"

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் மக்கள் அதிகளவில் பொருட்களை சேகரித்து வரும் நிலையில், தேவையற்ற முறையில் பொருட்களைப் பதுக்கி வைப்பதைத் தவிர்த்து, தமக்குத் தேவையான அளவுக்கு மாத்திரம் பொருட்களை கொள்வனவு செய்யுமாறு அந்த அதிகார சபை பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது.

அத்துடன், சரியான நடைமுறையின் கீழ் மக்களுக்குத் தேவையான பொருட்களின் அளவை மட்டும் வழங்குமாறு சிறப்பு அங்காடிகள் மற்றும் வர்த்தகர்களிடம் நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தில், தற்போதுள்ள விலைகள் மற்றும் நியாயமான விலைகளின் கீழ் மட்டுமே பொருட்களை விற்பனை செய்து, அரசாங்கத்திற்கும் நாட்டுக்கும் ஆதரவு வழங்குமாறு வர்த்தக சமூகத்திடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு செயற்படாத வர்த்தகர்களைக் கண்டறிய நாடளாவிய ரீதியில் விசேட சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்படும் என்றும், அவ்வாறான சிக்கல்கள் ஏதேனும் இருந்தால், நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையை நேரடியாக தொடர்பு கொண்டு தகவல் வழங்குமாறும் பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், உதவிகளை சேகரிக்கும் நோக்கில் வீடுகளுக்கு வரும் பொறுப்பற்ற நபர்கள் குறித்தும் விழிப்புடன் இருக்குமாறும் நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது. (ஐ)







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.12.2025 வெளியிடப்பெற்றது.